# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 294/2022**

**Deposition of Witness for PW1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | அய்யர் | Caste | : |
| Father/Husband Name | : | மாயாண்டித்தேவர் | Calling | : |
| Village | : | கிருஷ்ணாபுரம் | Religion | : |
| Taluk | : | | Age | : |

**( A1 to A4 present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 11.05.2026**

முதல்விசாரணை

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். 1வது எதிரி எனது தம்பி ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். நான் கடந்த 2016ம் ஆண்டு எதிரிகள் மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை :**

நான் எங்கள் ஊரைச் சேர்ந்த மாயன் என்பவருக்கு எனது மாட்டின் பாலை விற்பது சம்பந்தமாக எனக்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்தது என்றும், இந்நிலையில் கடந்த 24.11.2016ம் தேதி எதிரிகள் அனைவரும் சேர்ந்து என்னை அசிங்கமான வார்த்தைகளால்

திட்டினார் என்றும், வீட்டிற்குள் நுழைந்து எதிரி அய்யாக்கண்ணு கம்பியால் என் நெஞ்சில் அடித்தார் என்றும், எதிரி வீரலட்சுமி என்னை காலால் உதைத்தார் என்றும், எதிரி சௌரியம்மாள் கல்லால் எனது வீட்டின் கதவை உடைத்தார் என்றும், அப்போது அருகில் இருந்த சாட்சிகள் சண்டையை விலக்கிவிட்டபோது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு, எதிரிகளுக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு, சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமாதான மனு **(எ.த.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.05.12 11:13:59 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 294/2022**

**Deposition of Witness for PW2**

| | | | |
|---|---|---|---|
| Name | : இருளாயி | Caste | : |
| Father/Husband Name | : அய்யர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( A1 to A4 present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 11.05.2026**

**முதல்விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். 1வது எதிரி எனது கொழுந்தன் ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். எனது கணவர் அ.சா.1 கடந்த 2016ம் ஆண்டு எதிரிகள் மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார் கொடுத்தார். தற்போது நாங்கள் எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை :**

நாங்கள் எங்கள் ஊரைச் சேர்ந்த மாயன் என்பவருக்கு எனது மாட்டின் பாலை விற்பது சம்பந்தமாக எங்களுக்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்தது என்றும், இந்நிலையில் கடந்த 24.11.2016ம் தேதி எதிரிகள் அனைவரும் சேர்ந்து எனது கணவர் அ.சா.1யை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், வீட்டிற்குள் நுழைந்து எதிரி அய்யாக்கண்ணு கம்பியால் எனது கணவரின் நெஞ்சில் அடித்தார் என்றும்,

எதிரி வீரலட்சுமி எனது கணவரைக் காலால் உதைத்தார் என்றும், எதிரி செளரியம்மாள் கல்லால் எனது வீட்டின் கதவை உடைத்தார் என்றும், அப்போது அருகில் இருந்த சாட்சிகள் சண்டையை விலக்கிவிட்டபோது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு, எதிரிகளுக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை**

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.05.12 11:14:05 +0530